செய்தி வெளியீடு எண் : 2271 நாள் : 15.12.2022

## செய்தி வெளியீடு

**முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டி நடத்துதல் தொடர்பான ஆலோசனை கூட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (15.12.2022 ) சென்னை நேரு உள் விளையாட்டரங்க கூட்ட அரங்கில் நடைபெற்றது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 44வது செய்து ஒலிம்பியாட் நிறைவு விழாவின் போது, "ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மற்றும் கபடி, சிலம்பாட்டம் ஆகிய இரண்டு பாரம்பரிய விளையாட்டுகளுக்கான மாநில மற்றும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் விரைவில் நடத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் முந்தைய காலங்களில் ஒரே ஒரு பிரிவில் மட்டுமே 10 விளையாட்டுகளில் மாநில போட்டிகள் நடத்தப்பட்டன. தற்போது பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெறும் வகையிலும், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் என அனைவரையும் உள்ளடக்கிய 16 பிரிவுகளில் போட்டிகள் நடத்திடும் வகையிலும், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை ரூ.47,04,72,800 /– ( ரூபாய் நாற்பத்தேழு கோடியே நான்கு இலட்சத்து ஏழுபத்து இரண்டாயிரத்து எண்ணூறு) செலவில் நடத்திடவும், இப்போட்டிகளை சிறப்பாக நடத்திட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்குழு மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தும் குழு ஆகிய குழுக்களை அமைத்திடக்கோரும் கோப்பில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2022 ) பதவியேற்றவுடன் கையொப்பமிட்டார்.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் கோப்பைக்கான போட்டியினை சிறப்பாக நடத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள நடவடிக்கைகள், போட்டிகள் நடத்தப்பட உள்ள விவரம், இப்போட்டிகளை நடத்திட மாநில, மாவட்ட அளவிலான குழுக்கள் அமைத்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு, செலவினம் போன்றவை தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் நேரு உள் விளையாட்டரங்க வளாகத்திலுள்ள நீர்சிகிச்சை நீச்சல் குளம் (Hydrotherapy Swimming Pool), ஸ்குவாஷ் உள் விளையாட்டரங்கம் மற்றும் 400 மீட்டர் செயற்கை ஓடுதளம், இயற்கை புல் கால்பந்து மைதானம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நேரு உள் விளையாட்டு அரங்க வளாகத்திலுள்ள அனைத்து விளையாட்டு கட்டமைப்பு வசதிகள், பயன்பாடு, பயிற்சி பெறும் வீரர் மற்றும் வீராங்கனையர்களின் எண்ணிக்கை, பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படும் விவரங்கள், அளிக்கப்பட்டு வரும் பயிற்சிகள் மற்றும் பராமரிப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன் இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in